தினமணி 20/02/2019

# 24.வீரபாண்டி கிராமத்தில் சமூக மேம்பாட்டு முகாம்



முகாமில், மரக்கன்றுகளை இலவசமாக வழங்கிய நாட்டு நலப்பணித் திட்ட மாணவிகள்.

பெ.நா.பாளையம், பிப்.19: சின்னதடாகத்தை அடுத்துள்ள 24.வீரபாண்டி கிராமத்தில் அவினாசிலிங்கம் பொறியியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவிகள் பல்வேறு சமூக வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டனர்.

24.வீரபாண்டி அரசு நடுநிலைப் பள்ளியில் நடந்த உன்னத பாரதம் என்ற தலைப்பிலான முகாமின் தொடக்க நிகழ்ச்சிக்கு நாட்டு நலப்பணித் திட்ட தலைவர்கள் எஸ்.ராஜலட்சுமி, ஆயிஷா பேகம் ஆகியோர் தலைமை வகித்தனர். சமூக ஆர்வலரும், முன்னாள் கவுன்சிலருமான ஆர்.வி.சி.நடராஜன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று முகாமைத் தொடக்கி வைத்தார்.

முகாமில், மருதங்கரை, மேல்பதி, கீழ்பதி கிராமங்களில் சமூகக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. கிராமங்களில் ஆங்காங்கே பலன்தரும் மரக்கன்றுகள் நடப்பட்டன.

பொதுமக்களுக்கு மரக்கன்றுகளும் இலவசமாக வழங்கப்பட்டன. அரசுப் பள்ளி சுற்றுச் சுவருக்கு வர்ணம் பூசப்பட்டது. பள்ளியின் தலைமை ஆசிரியர் சாமிநாதன் அனைவருக்கும் சான்றிதழ்களை வழங்கினார்.

முகாமுக்கான ஏற்பாடுகளை திட்ட அலுவலர்கள் ஜி.மகாலட்சுமி மாலினி, ஆர்.ரம்யா, எஸ்.திவ்யா ஆகியோர் செய்திருந்தனர்.